**பத்திரிக்கைசெய்தி**

**மாவட்டஆட்சித்தலைவர் அலுவலகம்,நாகர்கோவில்**

H/8105/2020 நாள்:15.07.2021

கன்னியாகுமரிமாவட்டத்தில் கொரோனாதடுப்புநடவடிக்கைகள் பற்றியமாவட்டஆட்சித்தலைவரின் செய்திக்குறிப்பு:-

- கன்னியாகுமரிமாவட்டத்தில் நாளை(16.07.2021)முதல் திருமணமண்டபங்களில் திருமணம் மற்றும் அதைச் சார்ந்தசடங்குகள் நடத்தஅனுமதிக்கப்படுகிறது.திருமணமண்டபங்களில்கீழ்கண்டநிபந்தனைகளுடன் திருமணம் மற்றும் அதைச்சார்ந்தசடங்குகள் நடத்தப்படவேண்டும்.
    1. திருமணநடத்துவதற்கானநபர்கள் மண்டபம் குறித்துஉரிய முழு விபரங்களுடன் பதிவுசெய்வதைஉறுதிப்படுத்திடவேண்டும்.
    2. 50 நபர்களுக்குமிகாமல் திருமணம் மற்றும் அதைச் சார்ந்தசடங்குகளுக்குமட்டுமேஅனுமதிக்கப்படவேண்டும். 50 நபர்களுக்குஅதிகமாகநபர்கள் பங்கேற்பதுதெரியவரும் பட்சத்தில் சட்டப்பூர்வநடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவேண்டும்.
    3. அரசியல்,சமயமற்றும் சமூகசார்ந்த கூட்டங்கள் திருமணமண்டபத்தில் வைத்துநடைபெறுவதற்குஅனுமதியில்லை.
    4. திருமணம் நடத்தஅனுமதிகோரிதொடர்புடையவருவாய் கோட்டாட்சியர்,நாகர்கோவில் மற்றும் சார் ஆட்சியர்,பத்மனாபபுரம் ஆகியோரிடம் மின்னஞ்சல் (rdongl.marriage.covid19@gmail.com) (rdopdmpermissions@gmail.com) மூலம் கட்டாயஅனுமதிபெறப்படவேண்டும்.
    5. அனுமதிஆணைசரிபார்த்தபின்னரேதிருமணமண்டபத்தில் திருமணம் நடத்தமண்டபஉரிமையாளர்கள் அனுமதிவழங்குவதைஉறுதிசெய்யவேண்டும்.
    6. தினசரிதிருமணம் நடத்தஅனுமதிவழங்கியவிபரத்தினைநாகர்கோவில் வருவாய் கோட்டாட்சியரும்,பத்மனாபபுரம் சார் ஆட்சியரும் மாவட்டபேரிடர் மேலாண்மைபிரிவிற்குதெரியப்படுத்திடவேண்டும்.
    7. அனுமதிவழங்கப்பட்டதிருமணம் மற்றும் அதைச் சார்ந்தநிகழ்ச்சிகளில் விதிமீறல் இருப்பதுகண்டறியப்பட்டால் தொடர்புடையவட்டாட்சியர்கள் சட்டப்பூர்வநடவடிக்கைமற்றும் அபராதம் விதிக்கவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.
    8. திருமணநிகழ்வில் கலந்துகொள்ளும் நபர்கள் முகக்கவசம் அணிவதையும்,சமூக இடைவெளிபின்பற்றப்படுவதையும் திருமணமண்டபஉரிமையாளர்கள் உறுதிசெய்திடவேண்டும்.
    9. அரசின் வழிகாட்டுநெறிமுறைகள் திருமணமண்டபத்தில் பின்பற்றப்படுவதையும்,பொதுமக்களுக்குதெரியும் வகையில் விளம்பரம் செய்வதையும் வட்டாட்சியர்கள் உறுதிப்படுத்திடவேண்டும்.

- கன்னியாகுமரிமாவட்டத்தில் ஆசாரிபள்ளம் மருத்துவக்கல்லூரிமருத்துவமனையிலும்,களப்பணியாளர்கள் மூலமாகவும்,சோதனைச்சாவடிகள் மூலமாகவும் இதுவரை8,53,748நபர்களுக்குகொரோனாபரிசோதனைமேற்கொள்ளப்பட்டுள்ளது.
- தற்போதுமொத்தம் 230பேர் கொரோனாசிகிச்சையில் உள்ளனர். இதில் ஆசாரிப்பள்ளம் அரசுமருத்துவகல்லூரிமருத்துவமனையில் 36பேரும்,கோவிட் கவனிப்புமையங்களில்,தனியார் மருத்துவமனைகளில் 19பேரும் சிகிச்சையில் உள்ளனர்.
- 14/07/2021 அன்று43நபர்களுக்குகொரோனாநோய்த்தோற்றுஏற்பட்டுள்ளதாககண்டறியப்பட்டுள்ளது. இதுவரைபாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கைமொத்தம் 57,525பேர் இதில் 55,225பேர் முற்றிலும் குணமடைந்துவீடுதிரும்பிஉள்ளனர்.
- கன்னியாகுமரிமாவட்டத்தில்இதுவரைமுதல் கட்டதடுப்புமருந்து3,44,153நபர்களுக்கும், இரண்டாம் கட்டதடுப்புமருந்து70,016நபர்களுக்கும் செலுத்தப்பட்டுள்ளது
- கன்னியாகுமரிமாவட்டத்தில் முககவசம் அணியாததுமற்றும் சமூக இடைவெளியைபின்பற்றாததுஆகியகாரணங்களுக்காக இன்றுமட்டும் 109நபர்களுக்குஅபராதமாகரூபாய் 22,400வசூலிக்கப்பட்டுள்ளது.இதுவரைமொத்தம் 97,740நபர்களுக்குஅபராதமாகரூபாய் 2,17,49,870/- வசூலிக்கப்பட்டுள்ளது.

மாவட்டஆட்சித்தலைவர்
கன்னியாகுமரிமாவட்டம்.